Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ ஹு சித்திரை மீ கசஉ (26—4—34) } No. 22.

## ஔவை குறள்

தெரிந்து தெளிதல்

தேரித் தெளிமின் சிவமென்றே யுள்ளுணர்வில்
கூறிய பல்குணமு மாம். (1)

உண்டில்லை யென்னு முணர்வை யறிந்தக்கால்
கண்டில்லை யாகுஞ் சிவம். (2)

ஒருவர்க் கொருவனே யாகுமுயிர்க் கேல்லாம்
ஒருவனே பல்குணமு மாம். (3)

எல்லார்க்கு மொன்றே சிவமாவ தென்றுணர்ந்த
பல்லோர்க்கு முண்டோ பவம். (4)

ஆயுமிரவியு மொன்றே யனைத் துயிர்க்கும்
ஆயுங்கா லொன்றே சிவம். (5)

ஓவாத தொன்றே பலவா முயிர்க்கெல்லாந்
தேவான தென்றே தெளி. (6)

தம்மை யறியாதார் தாமறிவோ மென்பதன்
செம்மையா லீசன் றிறம். (7)

எல்லா வுலகத் திருந்தாலு மேத்துவர்கள்
நல்லுலக நாத னடி. (8)

உலகத்திற் பட்ட வுயிர்க்கெல்லா மீசன்
நிலவுபோ னிற்கும் நிறைந்து. (9)

உலகத்தில் மன்னு முயிர்க்கெல்லா மீசன்
அலகிறந்த வாதியே யாம். (10)

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
பவ-௵ சித்திரை-மீ 14௳

## சீவகாருண்ணியம்

சீவகாருண்ணியம் என்பது சீவர்கள் மாட்டு வைக்கப்படும் கருணை எனப்படும். சீவர்களிடத்துக் கருணை வழங்குதற்கு உரியர் யார்? சீவர்கள் சீவர்களிடத்துக் கருணை வழங்குதற்கு உரியர்களா? அறியாமை வடிவமுடைய—வினைரூபமாகிய சீவர் சுயநலங் கருதிப் பிறரிடம் பற்றுவைப்பதேயன்றி—அபிமானம் பற்றிச் செயல் புரிவதேயன்றிப் பிறரிடத்துக் கருணை வழங்குதற்கு உரியரா? சீவருக்குக் காருண்ணியம் ஏது? காருண்ணியம் உடையோம் என அபிமான மிகுதியால் கழறிச் சீவர் புரியும் செயல்கள் என்ன பயனைத் தரும்? தமது துன்பங்களை நீக்கும் வழியறியாது பிறர் உதவிகளையே வேண்டிநிற்கும் சீவர் பிறர் துன்பங்களை நீக்கி அவரை ஈடேற்ற வல்லாரா? அபிமான மிகுதியால் வியாபாரம் புரிந்து வயிறு வளர்த்துப் போலிப் புகழும் இகழும் பெறுவதேயன்றி, பிறர் துன்பத்தை உள்ளவாறு அறிந்து அதற்கேற்ற சிந்தனை சொற் செயல்களால் அத்துன்பத்தை நீக்கும் ஆற்றல் அஞ்ஞான வடிவமுடைய சீவர்களுக்கு உளதாதல் எப்படி? தமது கர்மத்தை அறிந்து ஏற்ற கர்மங்களாகிய புதுவினையால் அக்கர்மத்தை ஒழித்துத் துன்பம் நீங்கி இன்புற அறியாத சீவர், பிறர் கர்மங்களை அறிந்து ஏற்ற கர்மங்களால் அவர் துன்பங்களை ஒழித்து அவரை இன்புறச் செய்ய வல்லராவாரா? சீவர்கள் இயல்பைப் பூரணமாக அறிய வல்ல கடவுள் அருளாற் பெற்ற உண்மைச் சாதகயோகங்களால் தங்கள் சர்மங்களை ஒழித்து அஃதாவதுசத்துவத்தில் ரசோகுணத் தலைமை பூண்டு கர்மத்தால் கர்மத்தை க்ஷயஞ் செய்து—உடலுயிர்என்னும் இருவினை நிறையை சமஞ்செய்து—ஒப்பக் கண்டாங்கு அமல நெறி இஃதெனக் கொண்டு மாயையை அடிப்படுத்தித் தமக்கு வேண்டுவன யாவற்றையும் கண்டு கொண்டு அநுபவித்து உபரதி பெற்று—உண்மைத் துறவு பெற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் சீவகாருண்ணியநெறியை ஒரு சிறிதும் அறியாது, இராசத குண மேலீட்டினால் சாதி அபிமானம் பாஷாபிமானம் தேசாபிமானம் மதாபிமானம் பூண்டு முனைப்பால் பலப்பல செயல்களைப் புரிந்து அவச்சலனமடைந்து தமக்கும் பிறர்க்கும் கேடு சூழ்ந்து மாண்டு போகும் சீவர்களாகிய நாம் காருண்ணியம் உடையேம் என்பது போன்ற மோசமான கொள்கை பிறிதுண்டோ? சுயநலம் கருதிய பலர் தாம் உலகிற்கு நன்மை புரிய முன்வந்தவர் என்று விளம்பரஞ் செய்து உஞற்றுஞ் செயல்களால் அவர்க்கும் பிறர்க்கும் கஷ்டங்களை சேர்த்து அவர் நோக்கம் பிறர்க்கு எட்டுணையும் பயன் தராது அவர் தமக்கே வயிற்று வளர்ப்பு வியாபாரமாய் ஒழிந்தமையும் ஒழிகின்றமையும் கண் கூடு. சீவர் தமது சுயநலத்தை வஞ்சகமாக மறைத்துக்கொண்டு பிறர்க்கு நன்மை புரிவோர் போல் முன்வந்து சிலபல வஞ்சகச் செயல்களையே புரிந்து ஈற்றில் தமது நோக்கம் வெளிவரப் பெற்றுச் சுயநலம் கைகூடாமையால் துன்பமடைந்து பிறர்க்குத் தீமை விளைத்துப் பழிப்படலும் கண்கூடாதலால் அவர் போலிக் கருணையின் இயல்பு நன்கு புலப்படும். சீவர்கள் சிந்தனை சொற் செயலெல்லாம் எவ்வாற்றானும் சுயநலம் கருதியனவே யன்றிப் பிறர் நலம் கருதியனவாகா. முனைப்பால் புரியும் தான தருமங்களும் பிறவும் சுயநலம் கருதியனவே. ஆதலால் சீவர் எவ்வாற்றானும் பிறர் மாட்டுக் கருணை புரிதற்குரியராகார் என்பது வெள்ளிடை மலையாம். தாம் நினைத்தவை யெல்லாம் முன்வந்து நிற்கப் பெற்று அவற்றை வேண்டியவாறு நிறைகண்டு அநுபவித்து உபரதி பெற்ற தத்துவப் பெரியாரே—சீவத்துவம் நீங்கப் பெற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அரிய பெரிய ஆற்றல் அமையப் பெற்ற அந்தணரே சீவர்மாட்டுக் காருண்ணியம் புரிதற்கு உரியார் என்க. ஞானசம்பந்தர் முதலிய பரமாசாரியர்கள்—அந்தணர்கள்—துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகராய் சீவர்கள் கர்மச் செவ்வி அறிந்து திருவருள் வழிப்பட்டு நின்று ஏற்ற ஏற்றவாறு தண்டமும் அருளும் தகவுறப் புரிந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட சீவகாருண்ணிய மூர்த்திகளாய் விளங்கியமை அறிக. இதனால் சீவகாருண்ணியமுடையார் இயல்பு கண்டு கொள்க.

சுயநலமே கருதுவது சீவ குணமாதலால், அது காரணமான செயலெல்லாம்—பரோபகாரம் என்று உபசரிக்கப்படும் தானம், தருமம் முதலியன வெல்லாம் மேற் சென்மக்

களில் அச் சிவர் முனைப்பு நீங்கிக் காருண்ணியமுடையாராதற் கேற்ற பக்குவம் பெறுதற்கு வழிகளாக ஒருகால் அமையக்கூடும். ஆதலால், அவையெல்லாம் உலகியல் நோக்கி அறிவுடையோரால் புறக்கணிக்கப்படுவனவாகா. அவை யெல்லாம் வாய்மையில் சிவகாருண்ணியம் பற்றிய செயலல்ல என்பது மட்டுமே ஈண்டுக்காட்டப்பட்டது.

மிருகம் பறவை முதலிய சீவ வர்க்கங்களின் ஊனை உண்ணுது, மரம், கொடி, செடி, புல், பூண்டு என்னும் தாவர சீவ வர்க்கங்களையே—காய் கனி கிழங்கு இலை முதலியவற்றையே உண்ண வேண்டும் எனவும், இவ்வொழுக்க முடையவரே சிவகாருண்ணிய முடையோர் எனவும் பெருமுழக்கிடுவோர் பலர். இதுவே அறத்தாறு என்று சங்கங்கள் சபைகள் மூலமாகவும் நூன்முகமாகவும் பிரசாரணம் புரிந்து உயிர்வாழ்வோரும் பலர். இவரெல்லாம் அவசியம் நோக்குழியும் மிருகம் பறவை முதலிய சீவ வர்க்கங்களைக் கொலை செய்யாதிருப்பதும் தாவர சீவ வர்க்கங்களை மாத்திரம் இஷ்டம்போலக் கொன்று உண்பதுமே உயரிய சித்தாந்தமாகிய சைவநெறி—சிவகாருண்ணியம் எனவும், மிருகம்,பறவை முதலியவற்றின் ஊனை உண்பவரெல்லாம் சிவகாருண்ணியம் இல்லாதவர்—தீண்டப்படாதவர் எனவும், ஒருவன் ஊன் உணவை மட்டும் ஒழித்து விட்டானுயின் அவனே முத்தி வாயிலில் நிற்கின்றவன் எனவும் நிச்சயமாக நம்பி இதுவே வைதிக சைவ உண்மை எனப் பலர்க்கும் போதித்து இதற்கு மாருகப் பேசுபவரோடு எதிர்த்து வாதாடிச் சாதனை எதிர்பார்த்தவர்களாய் விற்றிருக்கின்றனர் என்று அறிதல் வேண்டும். ஒருவன் எவ்வகையான தீய ஒழுக்கம் உடையனுயினும் அவன் ஊன் உணவை ஒழித்து தாவர உணவை உண்பவனுனல்-மாமிசத்தை விடுத்து மரக்கறி உண்பவனுனல் அவனே சிறந்த சிவகாருண்ணியம் உடையவனுவன் என்பது தற்காலத்தில் சட்டமாய் விட்டது. மற்றொருவன் எவ்வகையான நல்லொழுக்க முடையவனுயினும் சிறிதாவது மாமிசம் உண்பவனுனல் அவன் அசைவன் என்பதும் கடவுள் கருணைக்கு இலக்காகாது நரகமே புகுவான் என்பதும் தற்காலத்தில் சட்டமாய் விட்டது. மரம் முதலிய தாவர வர்க்கங்களும் உயிருடையனவே யாயினும் அவையெல்லாம் மிருகம் பறவை முதலியமற்றைய சீவர்கள்போல அறிவுடையன அல்ல என அறியாமையால் கருதி அத்தாவரங்களைக் கொன்று சமைத்து அக்கினிக்கும் குருவுக்கும் கடவுளுக்கும் படைத்து உண்டால் அச் சிறிய பாவம் நீங்கிவிடும் எனவும் தமது பாவச் செயலுக்குக் கழுவாயும் (பிராயச்சித்தமும்) சாமார்த்தியமாகக் கூறிப் பிறரை ஏமாற்றி அமைகின்றனர் தற்கால மாந்தரிற் பலர். மிருகம் பறவை முதலியவற்றைக் கொன்று உண்டு ஊனைப் பெருக்குவோரும் இதுபோன்ற போலிச் சாட்டுக்களைக் கூறி ஏன் அமையக் கூடாது என்பதனை அறியமுடியாத் தகைமை யுடையவர் இவர். உயிர் வாழ்க்கையில் தாவர சங்கமங்களெல்லாம் உற்பத்தி வளர்ச்சி அழிவு என்பனவற்றுல் ஒரே தன்மையன என்று வேதங்கள் முறையிடுவதை உணரும் ஆற்றல் பலகாலமாகப்(எக்காரணத்தாலோ அறியேம்) பலர்க்கும் மறைந்துவிட்டமையாற்றுன் அறியாமை வடிவுடைய சிவருட் பலர் தம்மைச் சைவர் எனவும் சீவகாருண்ய மூர்த்திகள் எனவும் நிச்சயமாகத் துணிந்து உண்மைச் சைவம் இன்னது எனவும் உண்மை முத்தி நிலையின் இலக்கணம் இன்னது எனவும் அறியமுடியாது இடர்ப்பட்டுமாண்டு போக வேண்டியவராயினர்.

புண்ணிய புருடராகிய ஜகதீஸ் சந்த்ர வஸு (Sir. J. C. Bose) என்னும் எமது இந்திய சகோதரரின் அரிய பெரிய ஆராய்ச்சியை உற்று நோக்குமிடத்து உண்மை வெட்ட வெளிச்சமாகின்றது. பத்திரிகையில் வெளிவந்த அன்னவர் பிரசங்க சாரமான ஒரு விஷயம் பலரும் படித்துணருமாறு இங்கே அநுவாதமாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

“ஸர். போஸ் ஆராய்ச்சிசாலை”
“ஆண்டு விழா வைபவம்”
“ஸர். போஸ் பிரசங்கம்”
“கல்கத்தா”

“இன்று ஸர் ஜே.சி.போஸின் ஆராய்
“ச்சி சாலையின் 11-வது ஆண்டுவிழா
“அதிக விமரிசையாக நடந்தது. இவ்
“விழாவிற்குச் சர்க்கார் மந்திரிகள் கல்
“லூரி மாணவர் முதலிய பிரபலஸ்தர்
“கள் பெருங் கூட்டமாக வந்திருந்தார்
“கள். ஸர். ஜே. சி. போஸ் அவ்விழா
“வில் தாவர வர்க்கத்தின் வாழ்வைப்
“பற்றி அரியதோர் பிரசங்கம் செய்த
“தோடு பல செடிகளைப் பிரத்தியட்ச
“மாகவும் காட்டினுர். ஒரு செடி உண
“வை அருந்திக்கொண்டு இருக்கும்
“பொழுது, மணியை அடித்ததும்
“ (அது) திகைத்து அலறுவதையும்
“மயக்க மருந்து கொடுத்ததும் செடி
“களெல்லாம் சோர்ந்து விடுவதையும்
“மின்சார சக்தி மேலே பட்டதும்
“செடிகள் துடிப்பதையும் செடிகள்
“படும் மரணவஸ்தையையும் பிரத்தி
“யட்சமாக நிரூபித்துக் காட்டினுர்.
“அங்குக் கூடியிருந்த சனங்கள் இவ
“ற்றையெல்லாம் கண்டு மெய்சிலிர்த்து
“நின்றனர்.

“வியன்னுவைச்சேர்ந்த பண்டிதர்
“போலிஸ் (என்பவர்),ஸர். போஸின்
“ஆராய்ச்சி சாலையில் பயிற்சி பெறு
“வதற்காக அங்கு வந்திருக்கிருர்.
“அவர் பேசுகையில் கூறியதாவது:—

“நான் எதை எதிர்பார்த்தேனே
“அதைவிட அதிகமாக இந்த
“ஆராய்ச்சி சாலையில் கண்டு அதிக
“ஆச்சரியமடைந்தேன். வாயற்றசீவன்
“களாகிய தாவரவர்க்கம் பேசும்படி
“செய்வதையும், அத்தாவர வர்க்கத்
“தின் மர்மத்தை உலகம் அறிந்து
“கொள்ளும்படி செய்த இப் பெரியார்
“ஸ்தாபித்த இந்த ஆராய்ச்சிசாலையைக்

“காணும்பாக்கியம் எனக்குக் கிடைத்
“திருப்பதையும் குறித்து நான் அள
“வற்ற சந்தோஷமடைகிறேன்.”

பின்னர் ஸர். போஸ் செடி கொடிகளின் உணர்ச்சியைக் குறித்தும் மற்றும் பல உதாரணங்களைக் குறித்தும் கூறி விட்டு முடிபுரையாகக் கூறியதாவது:—

“இன்று மாலையில் காட்டிய விஷயங்
“களிலிருந்து இதுவரை நமக்கும்
“ தாவர வர்க்கத்துக்கும் அதிக வித்தி
“யாசம்இருக்கிறது என நாம் நினைத்து
“வந்த தெல்லாம் சுத்த ஆதாரமற்ற
“தென்பது வெளியாகி இருக்குமென்
“றே நம்புகிறேன். தாவர வர்க்கத்தின்
“வளர்ச்சி சாதாரண ஸ்தூல வளர்ச்சி
“மாத்திரமல்ல என்பதையும், அதன்
“ஒவ்வோர் அணுவிலும் உணர்ச்
“சியே இருக்கின்ற தென்பதையும்
“இப்பொழுது பிரத்தியட்சமாகத்
“தெரிந்து கொண்டோம். மேலும்
“தாவர வர்க்கம் உயிர் வாழும்போது
“எத்தகைய நிலைமையில் இருக்கிற
“தென்பதையும், செத்ததும் எத்த
“கைய நிலையை அடைகிறதென்பதை
“யும் கண்டோம். ஜீவராசிகளுக்கும்
“தாவர வர்க்கத்திற்கும் எத்தகைய
“சம்பந்தமும் இல்லை என்ற உணர்
“ச்சி இனியும் நம்மிடம் இருக்க முடி
“யாது. இப்பொழுது இங்குக் காட்
“டிய உதாரணங்களிலிருந்து உற்பத்தி
“வளர்ச்சி அழிவு முதலிய யாவற்
“றிலும் இருவகையான வர்க்கத்துக்
“கும் எத்தகைய வித்தியாசமும்
“இல்லை என்பது நன்றாகத் தெரிகி
“றது. இந்த உண்மைகளை அறிவதி
“லிருந்து மர்மத்தை இன்னும் அதிக
“மாக ஆராயவேண்டும் என்ற எண்
“ணம் தான் அதிகமாக உண்டாகும்.
“மனிதருக்குக் காலா பக்கங்களிலும் அவ
“ரவர்க்குச் சரியாகத் தெரியாதகணக்
“கற்ற விஷயங்களை அடங்கியிருக்
“கின்றன.”

“ஆகையால் ஒருவர் தமது ஆராய்ச்
“சியின் முயற்சியால் ஒருபுது விஷயத்
“தைக் கண்டுபிடிப்பாராகில் அது
“எவ்விதத்திலும் பெரிய ஆச்சரிய
“மாகிவிடாது. ஏனெனில் நாம் இன்
“னும் அறிந்து கொள்ளாத பல அதி
“சயங்கள் மறைந்தேயிருக்கின்றன.”

இது போன்ற அரிய பெரிய பிரசங்கங்கள் புண்ணிய புருடராகிய சந்த்ர வஸு என்பவரால் உலகத்தின் பல பாகங்களிலும் செய்யப்பட்டு, அவற்றால் காட்டப்பட்ட வேத உண்மைகள் அறிஞர் பலராலும் நேரில் கண்டு வியப்புடன் ஒப்புக்கொள்ளப்பட்டமையும் பலரும் அறிந்ததே! இவ்வாறு பிரத்தியட்சமாக—வெட்ட வெளியாகப் பல சனசமூகத்தில்—அறிஞர் பேரவையில் யாவரும் அங்கிகரித்துப் பாராட்டி வியப்படையுமாறு காட்டப்பட்ட உந்நதமான ஆராய்ச்சியின் உண்மையால், மரம்,செடி,கொடி, புல், பூண்டு என்னும் தாவர வர்க்கங்களுக்கும் ஊர்வன, நீர்வாழ்வன, மிருகம், பறவை என்பன வற்றிற்கும் மனிதவர்க்கத்துக்கும் உயிர் வாழ்க்கையில் யாதொரு பேதமும் இல்லை என்பது நிச்சயமாயிற்றன்றோ! சத்தியமாயிற்றன்றோ! மனித வர்க்கம் உயர்ந்ததெனவும் அதனினும் தாழ்ந்தன மிருகம் பறவை முதலிய வர்க்கங்கள் எனவும் அவற்றினும் தாழ்ந்தது தாவர வர்க்கம் எனவும் பலகாலம் தொட்டுப் பரம்பரையாய்க் குருட்டுத்தனமாய்,வேதவாக்கியங்கட்கு முரண்படுமாறு வழங்கி வந்த போலிக் கொள்கைகள் வேரறுக்கப்பட்டன அன்றோ! —முன்னிலைப் பொருள்களாகிய சீவவர்க்கங்கள் ஒன்றையும் மனிதன் தொடக்கூடாது — அருந்தக்கூடாது என்பது வாய்ப்பேச்சோடு அமையாது நுண்ணிய கருவிகள் மூலம் கண்ணுற் கண்ட உண்மைக் காட்சியாய்—வெறுங்கண்ணாலும் நேரிற்காணும்படி காட்டப்பட்ட உண்மைக் காட்சியாய் வெளிப்படையாயிற்று அல்லவா? ஆராய்ச்சியை எவரும் குறை கூற முடியாதே! வாய்ப்பேச்சோடு மட்டும் இருந்தால் எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார் என்று கூறலாம். இதற்கு என்செய்வது? எமது சீவகாருண்ணியம் எங்கே? புலால் மறுத்தல் எங்கே? உற்பத்தி வளர்ச்சி உணர்ச்சி தொழில் சாவு என்பனவற்றில் சீவ வர்க்கங்களுள்—மனித வர்க்கம் முதல் தாவர வர்க்கம் ஈறாக உள்ளனவற்றுள் எத்தகையபேதமும்இல்லைஎன்றுஆராய்ச்சிக்காரர் பட்டப்பகல்போல் வெட்டவெளியாகக் காட்டிவிட்டனரே!

இங்ஙனமாக, சரம் அசரமென்பதெல்லாம் உயிருடையனவாயிருக்கவும் பிறந்து வளர்ந்து செத்துப்போகவும், மனிதர் மாத்திரம் செத்துப்போனால் முத்தியடைகின்றார் என்பது பேதமையிலும் பேதமையல்லவா? புலால் உண்ணாமல் இருப்பதே சீவகாருண்ணியம் என்பது குருட்டுத்தனமான கொள்கையல்லவா? பண்டைக்காலப் போலிச் சைவராகிய பௌத்த சமணர் கொள்கைகள் சீவகாருண்ணிய மூர்த்திகளாகிய சமயகுரவரால் கண்டிக்கப்பட்டதன் உண்மையும் நன்கு புலப்படவில்லையா? புலால் உண்பவரை மாத்திரம் புலையர் எனவும் சண்டாளர் எனவும் கூறி அவரை இகழ்ந்து ஒதுக்குவது பேதமையல்லவா?

ஆடு, மாடு, மான், மரை, உடும்பு, கோழி, மீன், முதலியன கொலைக்கு அகப்படாது ஒருகால் தப்பி ஓடவும் கூடும். கொல்லப்புகுவார்க்குத் தின்மையும் விளைக்கக் கூடும். துன்புறுத்தப்படுங்கால் அவை அலறுவதும் கேட்கப்படும். அந்தோ! அந்தோ! தாவரவர்க்கங்கள் அவ்வாறல்லவே! அவைகளின் கூக்குரலைக் கேட்க உயர்ந்த சென்மமெனக் கூறித்திரியும் மனித சென்மத்துக்குச் செவியுணர்ச்சி ஏது? அவைகள் படும் துன்பத்தைக் காண இந்த மனிதசென்மத்துக்குக் கண் ஏது? தாவரங்களைக் கொல்வதன்றோ பெரிய பாவம்! பெரிய உயிர்க் கொலை! புத்தன் என்ற அரச குமாரன் காலத்தும் பிற்காலத்தும் அருமை பெருமை வாய்ந்த வேதங்களின் உண்மைகளை அறில சிவர்

களும் அறிந்துய்வான் வேண்டி அவதரித்த பரம புண்ணிய புருடனை எமது சந்தரவஸா இல்லாமையாலன்றோ தாவரங்களை மட்டும் கொன்று உண்பது தான் சிவகாருண்ணியம் என்னும் மூடக்கொள்கை தடித்து உந்நதநிலையை அடைவதாயிற்று!

இது காறும் கூறியவைகளால் பெறப்படுவது யாது? சராசரமெல்லாம் உயிருடையனவாகலின்—பிறப்பு வளர்ச்சி, உணர்ச்சி, சாவு என்பனவற்றில் சமமுடையனவாகலின் ஒன்றையும் கொன்று அருந்தக் கூடாது என்பதே யாகும். ஒன்றையும் கொன்று அருந்தாமல் வேறு என் செய்வது? ஒவ்வொருவரும் பிறந்த பிறந்தவுடனே இறக்க வேண்டியது தான். ஏன்? யாவும் உயிருடையனவாய் மனிதர் போலவே உயிர் வாழ்கின்றனவாதலால் எவற்றையும் கொன்று உண்பது பாதகமே யாதலின் என்க.

பின்னர் நாம் உயிர் வாழ்தற்பொருட்டு என்செய்யவேண்டும்? முன்னிலையாகிய உணவுப் பொருள்களையே உண்டு உயிர் வாழ்தல் வேண்டும். நாம் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி இன்புறுதலே முன்னிலையான உணவுகளை நிறையும் இனமும் அறிந்து கொண்டு பஞ்சீகரணித்து அருந்துதலால் போந்த பயனாகும். ஒவ்வொருவரும் தம் தம் சரீர இயல்புக்கேற்ப—பௌதிக நிறைக்கு ஏற்ப—பௌதிக பஞ்சீகரணிப்புக்கு ஏற்ப, அஃதாவது தம் தம் சரீரத்தில் எந்த எந்தப் பௌதிக நிறை எந்த எந்த வகையான ஏற்றம் இறக்க நிறையாகப் பொலிந்திருக்கின்றதோ அந்த அந்த நிறையைக் குறைக்கவும் கூட்டவும் ஏற்ற நிறையும் இனமுமான முன்னிலை உணவு வர்க்கங்களைக் கண்டு எடுத்துப் பஞ்சீகரணித்து அளவோடு உண்டு புதியத் தூய்மை அடைந்து உய்ய வேண்டும் என்பதாம்.

முன்னிலை யெல்லாம் அன்னமே—உண்ணப்படுவனவே—நிறை முறையோடு அநுபவிக்கப்படுவனவே. முன்னிலையை நிறைகண்டு பஞ்சீகரணித்து அநுபவியாமல் ஒருவன் வீடடைதல் என்பது முயற்கொம்பே—பகடி வித்தையே. முன்னிலையாகிய பிரகிருதி காரியம் அன்னமே என்பதனைப் பின்வரும் உபநிடதச் சுருதியும் நன்கு புலப்படுத்தும்:

மைத்திராயண்ணியுபநிஷத்

“புருஷன் சேதனன். அவன்
“மாயைக்குள் இருக்கிறான். அவன்
“போக்தா (புஜிக்கிறவன்). அவன்
“பிரகிருதி காரியமான அன்னத்தைப்
“புஜிக்கிறான். இந்தப் பூதாத்மாவும்
“இவனுக்கு (ஆத்மாவுக்கு) அன்ன
“மாகிறான். அந்த அன்னத்தை உண்
“டாக்கினது பிரகிருதியாகையால்
“அன்னம் மூன்று குணமுடையதா
“யிருக்கிறது. இதை அநுபவிக்கிற
“வன் தான் உள்ளே இருக்கின்ற
“புருஷன். அதற்குப் பிரத்தியட்சப்
“பிரமாணமிருக்கிறது. பசு முத
“லான பிராணிகள் காரணத்தி
“லிருந்து உண்டாகின்றன. அவையும்
“பூஜிக்கத்தக்கனவாகின்றன. ஆதலி
“னாலே காரணமாயிருக்கிற பிரகிரு
“தியும் பூஜிக்கத்தக்கது தான். ஆக
“லினாலே புருஷன் அநுபவிக்கிற
“வன், பிரகிருதி அநுபவிக்கப்படு
“கிறது. அந்தப் பிரகிருதிக்குள்
“இருந்து கொண்டே புருஷன் அநு
“பவிக்கிறான். பிரகிருதியினால் செய்
“யப்பட்ட அந்த அன்னமானது முக்
“குணங்களையுடைய விகாரமாகை
“யால் மகத்தத்துவத்தை ஆதியாக
“வும், விசேஷங்களை(பஞ்சபூதங்களை)
“முடிபாகவும் உடையது. ஒரு
“சேதனம் உண்டென்பதற்கு இது
“வே அடையாளமாகின்றது.........
“.............. ..........................”

வியாபகத்தை வியாபகம் என்னும் முன்னிலையை — முன்னிலையாகிய உணவை — உணவாகிய நஞ்சை — நஞ்சாகிய மருந்தை உண்டு தான் கரை யேற வேண்டும், இஃதன்றி மனோதர்மத்தால் வேறு தடம்புகுந்து கரை யேறலாம்—வீடடையலாம் என்பது முடியாத காரியமே—பித்தன் பிதற்றலே—பிறரை ஏமாற்றி வயிறு வளர்த்தற்குரிய ஈனத்தனமான தந்திரமே. வியாபகமாகிய முன்னிலை யாவும் நஞ்சே. நஞ்செனின் அதுவே மருந்தாம். அந்நஞ்சு நிறையோடு பஞ்சீகரணிக்கப்படின் அமுதமாகும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்ப. அமுதமே சாதலை ஒழிப்பது. சரீரத்துள்ள அழுக்கு — அசுத்த நிறை — பாசம்—பிணி நீங்கி அச்சரீரம் அமலம் பெறுதலே நிறை கண்டு பஞ்சீகரணிக்கப்பட்ட முன்னிலையாகிய உணவின் பயனாகும். நிறையும் இனமும் அறிந்து உண்ணப்படும் உணவே சைவ உணவாகும். இவ்வுணவே உடலுயிரை அமலமடையச் செய்வது—சிவ சம்பந்தமாக்குவது—சைவமாக்குவது. தாவர சிவ வர்க்க உணவாயினும் ஏனைய சிவ வர்க்க உணவாயினும் நிறையும் இனமும் அறிந்து—சரீர பௌதிக நிறைக்கு ஏற்ப உண்ணப்படாவிடின் அவ்வுணவு அசைவ உணவேயாகும் — நஞ்சேயாகும். உண்மை முத்தியடைந்த எத்தனையோ இருடிகளும் முனிவர்களும் நிறையும் இனமும் அறிந்து முன்னிலை ஆகாரங்களை உண்டு சரீரம் அமலமடையப் பெற்றவரே யாவர்.

பசு வேட்டெரி யோம்பிய ஞானசம்பந்தன், பன்றியைக் கொன்று தின்ற கண்ணப்பன், மாடு தின்னும் புலையனாகிய நந்தன், தான் பெற்ற பிள்ளையைக் கொன்று சமைத்த சிறுத்தொண்டன், பெற்ற தகப்பனைக் கொன்ற சண்டி, மீனுணவுடைய அதிபத்தன் முதலியோரும், புலாலுணவுண்ட இருடிகள் முனிவர்களும், கள்ளும் மீனும் மிசைந்த கருவூராரும் சிவகாருண்ணியம் இல்லாதவர்களா? இவர்களெல்லாம் கடவுள் அருளைப் பூரணமாகப் பெற்று உண்மை முத்தியடைந்தார்கள் என்று தாவர சிவ வர்க்க உணவே சைவம் எனப்போற்

றும் தற்காலச் சிவகாருண்ணிய மூர்த்திகள் கூறுவதன் பொருள் என்னை?

பண்டைக்காலத்துள்ள அரசர்கள்—சேர சோழ பாண்டியர்கள் தெய்வ பத்தியிற் சிறந்தவர்கள் என்று தற்காலத்தமிழர்களும் பண்டிதர்களும் கூறுகின்றார்கள். ஆனால் அவ்வரசர்கள் ஊன் உணவையும் கட்குடியையும் வெறுத்த தற்காலச் சிவகாருண்ணிய சீலர்களல்லர் என்பதற்குச் சங்க நூல்களே தக்க சான்றாகும். ஆதலால் அவ் அரசர்களைத் தெய்வ பத்தியிற் சிறந்தவர்கள் என்றும் சிவபெருமான் அருளுக்கு இலக்காகி இருந்தவர்கள் என்றும் தற்காலத்தவர் எவ்வாறு கூறத்துணிகின்றனர்? அவர்களைப் புலையர் என்றும் கொலைஞர் என்றும் மகா பாதகர் என்றும் காம வெறியர் என்று மன்றோ கூறவேண்டும்! வேதாகம புராண இதிகாசங்கள் என வழங்கும் நூல்களும் கட்குடியையும் ஊன் உணவையும் வற்புறுத்தவுமில்லை கண்டிக்கவுமில்லை என்பது வெள்ளிடை. அவசிய நேர்ந்த விடத்தெல்லாம் மிருக முதலியவற்றின் கொலை இந்நூல்களில் விதிக்கப்பட்டேயுள்ளது. ஆலயங்களில் நிகழும் சாந்திகளிலும் யாகங்களிலும் மிருகம் முதலியவற்றின் பலி வேண்டப்படுகின்றது.

வேத உண்மைகளெல்லாம் மறைபொருளாகக் கிடப்பதறியாது, தமது உடலமாகிய ஆலயத்துள் விளங்கும் சாண்வட்ட குண்டம், ஓமகுண்டம், வைகுண்டம், பாத்திரம், யாக சாலை, பாகசாலை முதலிய எத்தனையோ திருநாமம் பெற்ற பாத்திரத்தில் அப்பாத்திரமறிந்து பிச்சையிட அறியாமல், அஃதாவது அவ் ஓமகுண்டத்தில் வளர்ந்தெழும் தேயுவுக்கு ஏற்ற ஆகுதிகள் கொடுத்துத் தலத்தை அமலமாக விளைவேறச் செய்ய அறியாது, பல பிறப்புகளுக்கு வித்தாய் விளங்கும் அவானால் கண்டதையெல்லாம்— இச்சைப்பட்டதையெல்லாம் இனமும் நிறையும் அறியாது உண்டு உண்டு ஆகுதி கொடுத்து அதனால் அந்த யாகாக்கினி அசுத்தமடைய உறுப்புக்களை யெல்லாம் அணு அணுவாக நாசப்படுத்தி காலகதியில் கொலை பாதகம் என்னும் உணர்ச்சி யில்லாமலே சாதலடைபவராகின்றனர். இவ் அநியாயமான சாதல் என்னும் தற்கொலையைத் தவிர்த்துச் சிவகாருண்ணிய முடையாராய் இன்புறவேண்டும் என்ற உண்மையையே

“பூந்துருத்தி பூந்துருத்தி எம்பிரானில்
பொல்லாப் புலால்துருத்தி போக்கலாமே”

என்னும் திருமறையால் இப்பேயுலகத்தில் உமிழ்ந்தார் எல்லோர்க்கும் பெரியவராகிய நமது அப்பர். உமிழ்ந்தும் என்னை? இதனைக் கொள்வார் யாரும் இல்லையே! தற்காலத்தவரெல்லாம் “சரீரம் அழிந்து விடும்—அழிந்தேவிடும். அதனைப் பொருட்பண்ணக் கூடாது. அது பிணமான பின்னேயே உயிர் முத்தியடைந்துவிடும்” என்று உழறிக் குழறி, இப்புலால் துருத்தியைப் பூந்துருத்தியாக்க வேண்டும் என்று அருளப்பட்ட திருவாக்குக்கு எதிர்மறையாகவே பிரசாரணம் செய்து கொண்டு சாதலடைகின்றனர். தம் முயிர்க்கு இரங்கி இத் தற்கொலையைத் தவிர்த்து இன்புற அறியாதார் பிற உயிர்க்கிரங்கும் சீவ காருண்ணிய முடையார் என்பது போன்ற அறியாமை பிறிதுண்டோ? அசுத்த நிறையாகிய ஊனைச் சுருக்கி அமல நிறையாகிய ஒளியைப் பெருக்குதல் வேண்டும். இதனால் அருளுடைமை கைகூடும்.

## குறள்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(ஷை புலால் மறுத்தல். 1).

என்றும் தேவர்.—“ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே” எனவும், “ஊன மொன்றின்றி உயர்ந்த பொருளுடைமை, மானிடவர்க் கெல்லாம் இனிது.” எனவும் பிறரும் கூறினர் (இனியது நாற்பது 5, 14.).

தற்காலச் சைவர்களும் சாஸ்திரிகளும் கனபாடிகளும் ஏனைய பண்டிதர்களும் “ஊனைப் பெருக்க ஊன் தின்னுதே” என்று ஓவாது கூவுகின்றார்கள். இவர்கள் கூறுவது உண்மையிலும் உண்மையே? ஆனால் “ஊன் சுருங்க ஊன் தின்னு” என்பதனையும் அஃதாவது ஊனுணவால் ஊனைச் சுருக்கி ஒளியைப் பெருக்கி அருளுடையராதல் வேண்டும் என்பதனையும் இவர்கள் உணராமைக்குக் காரணம் என்னையோ? அறிகிலேம். அழுக்கால் அழுக்கை அகற்றுதல் என்பதே ஊனால் ஊனைச் சுருக்குதல் என்பதன் பொருளாகும். நஞ்சை நிறை முறையின்றி உண்டால் சாதல் கிட்டும் என்பது பொய்யா? இல்லை. நஞ்சை நிறை முறையோடு உண்டால் அமரம் கிட்டும்—சாதல் நீங்கும் என்பதும் பொய்யா? இல்லை. ஊனால் ஊன் பெருகிச் சாதல் கிட்டுதலும், ஊனால் ஊன் சுருங்கி நித்தியத்துவம் உளதாதலும் மெய்யேயாகும். ஆதலால் முன்னிலை ஆசாரங்களில் பௌதிக நிறைக்குப் பொருத்தமானவைகளை உண்டு ஊனைச் சுருக்கி ஒளியைப் பெருக்க வேண்டும். இதனால் உடம்பு அசுத்த நிறை நீங்கி அமலமாகும்—தனிசத்துவம் உளதாகும்—வீடு உளதாகும். சரீரம் என்பது ஊனன்றி வேறோ? அதற்கு இனம் முன்னிலை ஊனன்றி வேறோ? “ஊனுக்கு ஊன்” என்னும் பழமொழி பொய்யா? “இனத்தை இனம் சேரும்.” “இனத்தை இனம் காக்கும்” “இனத்தை இனம் கொல்லும்” என்னும் பழமொழிகள் பொய்க்குமா?

ஊன் சுருக்க ஊன் உண்பது நன்று என்பதும் ஊன்பெருக ஊன் உண்பது தீது என்பதும் வேத உண்மையே என்பது பின்வரும் திருஞானசம்பந்தர் திருவாக்கானும் நன்கு வலியுறுத்தப்பட்டது.

# பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,
## பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்
அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

இந்நிலவுலகத்திலுள்ள பலசிறப் பட்ட பாஷைகள் ஒவ்வொன்றிலும் சிறந்த பல புலவர்கள் தோன்றி அவற்றைச் சீர்பெற வளர்த்தனர். எம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் திருவள்ளுவர், கம்பர் முதலியோர் தோன்றியவாறே, ஆரியத்தில் காளிதாசர் முதலியோரும் ஆங்கிலத்தில் 'சேக்ஸ்பியர்' முதலியோரும் இலத்தினில் 'தாந்தே' முதலியோரும் கிரீக்கில் 'கோமர்' முதலியோரும் தோன்றித் தத்தம் பாஷைகளைத் தலைசிறந்து விளங்கச் செய்தனர். எனினும், எம் முத்தமிழ் மொழியின் கண்ணே தோன்றிய “ஔவையார், ஆதிமந்தி, மாறோகத்து நப்பசலையார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக் குயத்தியார், காக்கைபாடினியார் நச்செள்ளையார், காவற்பெண்டு, பெருங்கோப்பெண்டு, குறமகள் இளவெயினி, பாரிமகளிர், நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினி, மாற்பித்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார், வெள்ளிவீதியார், குன்றியனார் காமூர்க்கிரன் எயிற்றியார், நன்னாகையார், பூங்கணுத்திரையார், பொன்மணியார், போந்தைப்பசலையார், அள்ளூர் நன்முல்லையார்” முதலியோர் போற் பெண்பாற் புலவர்கள் பலர் வேறெம் மொழியிலேனும் தோன்றினராக அறியப் பட்டிலது. எம் தமிழ் மொழியின் தனிச் சிறப்புக்களுள் இதுவும் ஒன்றேயாமென்க.

இத்தகைய தனிச்சிறப்பிற்குக் காரணராய இவர் தம் வரலாறுகளையும், இவர் களியற்றிய செய்யுள்களையும் பற்றிச் சில கூறுதும்.

## காக்கை பாடினியார் நச்செள்ளையார்

செள்ளை என்பது இவரதியற்பெயர். பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தின் பதிகத்தில் மையூர்கிழானுடைய மனைவியின் பெயர் அந்துவஞ்செள்ளை என்று கூறப்பட்டிருத் தலானும் பண்டைக்காலத்து செள்ளை என்பது பெண்பாலார்க்கு இயற்பெயராக வழங்கிவந்தது என்பதை நன்சறிந்து சொல்லலாம். நப்பூதனார், நக்கீரனார் நத்தத்தனார், என ஆண்பாலர்க்கேயன்றி, நப்பசலையார், நன்னாகையார், நக்கண்ணையார், எனப் பெண்பாலார்க்கும் கூட்டி வழங்கப்பட்ட சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல்லாகிய 'ந' என்பது கூட்டி நச்செள்ளையார் என இவர் அழைக் கப்பட்டார்.

குறுந்தொகையில்

“திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ் [சோறு
ஒருகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்வற்கு
விருந்து வரக்கரைந்த காக்கையது பலி [யே”.

எனுஞ் செய்யுளில் காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமைபற்றிக் காக்கைபாடினியார் என்ற சிறப்புப் பெயரைப் பிற்காலத்தில் ஆன்றோரால் இவர் பெற்றனர் போலும். பாடினி—பாடுபவள்.

நச்செள்ளைப் புலவராம் மெல்லியலார் குறுந்தொகையில் மேற்காட்டிய செய்யுளையும் புறநானூற்றில்

'ஓர் மறக் குடி மாது தன் சிறுவன் போரில் புறங்காட்டினன் எனப் பலர் கூறியதைக்கேட்டு, “ அன்னமாயின் அவன் பாலுண்டவென் முலையறுத்திடு

## திருஞானசம்பந்தர்

மைவேறுண்டல்நன்றெனவூவேறுண்டல்
நீதென
ஆனதொண்டரன்பினுற்பேச நின்ற
தன்மையான்
வானேடொன்ற ருடினன் வாய்மையாக
மன்னிநின்
றூனேடஞ்ச மாடினன் ஆனைக்காவு
சேர்மினே.
(தே. திருவானைக்கா—திருவிராகம் பண்,
கௌசிகம்.)

ஆதலால் முன்னிலையாகிய ஆகார வர்க்கங்களுள்ளே தாவர வர்க்கமே சிறந்ததும் பாதகமற்றதுமாம் என்பதும், தாவர வர்க்க உணவுடையோரே சிவகாருண்ணிய முடையாரென்பதும் உண்மை அறியாதார் போலிக் கூற்றாய் ஒழிந்தமை கண்டு கொள்க— “எதுவும் பயனற்றதும் அன்று, தாழ்ந்ததும் அன்று; உரிய உரிய இடத்தில் அது அது சிறந்ததேயாகும்.” என்றனர் மேனாட்டு அறிஞர் ஒருவர்

“Nothing useless is, or low
Each thing in its place is best.”
(Longfellow)

இதுகாறும் கூறியவைகளால் சீவர் சிவகாருண்ணிய முடையாராதற்கு உரியரல்லர் என்பதும், எந்த உயிர் வர்க்கத்தையாவது அகாரணமாகக் கொலை புரிதலும், அவசிய நேர்ந்துழியும் கொல்லாமல் இருப்பதும் பாதகமே என்பதும், முன்னிலையாகிய பிரகிருதி காரியமெல்லாம் அந்நமே என்பதும் அவற்றை நிறைகண்டு பஞ்சீகரணித்து உட்கியடைதலே சீவகாருண்ணியமும் முத்தி நெறியும் ஆம் என்பதும் பிறவும் ஒருவாறு உணரப்படும். சுபம்.

வன்,'' எனக்கூறி உதிரம் பெருகிப் பாய்ந்த போர்க்களம் புகுந்து பிணக் குவியல்களை யெல்லாம் புரட்டிப் பார்த்து அவற்றுள் தன்மகனும் சிதைந்து கிடப் பதைக் கண்டு ஈன்ற பொழுதினும் பெரிது வந்தனள், எனும் பொருளமைந்த

''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்
[டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறு
[கிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது வந்தனளே''

எனுஞ் செய்யுளையும் இயற்றியவர். இச் செய்யுள் மறக்குடி மங்கையரின் இயல்பை நன்கு விளக்குகின்றது.

குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு வேளாவிக் கோமான் தேவி யீன்ற மக னும், தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத் தொண்டியுட்டந்து கொடுப் பித்தவனும் பார்ப்பார்க்குக் கபிலையொடு குடநாட்டோரூர் ஈந்தவனும், வானவரம்ப னெனப் பேரினிது விளக்கியவனும், மழ வரைச் செருவிற் சுருக்கி மன்னவரை யோட்டியவனும், குழவி கொள்வாரிற் குடிபுறந்தந்த நாடல் சான்ற நயனுடை நெஞ்சினனுமாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் அரசன்மீது பதிற் றுப்பத்தில் ஆறும் பத்தை இயற்றியோரா கிய இவர் அணிகலனுக்கென்று ஒன்பது கலப்பொன்னும் நூறாயிரம் பொற்காசும் அவனால் பரிசு பெற்றவர்.

அவைதாம் வடுவடுநுண்ணயிர், சிறு செங்குவளை, குண்டுகண்ணழி, நில்லாத் தானை, துஞ்சும்பந்தர், வேந்து மெய்ம் மறந்தவாழ்ச்சி, சில்வளைவிறலி, ஏவிளங்கு தடக்கை, மாகூர்திங்கள், மரம்படு தீங் கனி என்னும் பத்துமாம்.

## முதலாஞ் செய்யுள்

நெடுந்தகாய்! நீ குடபுலமுன்னிப் போவதைப் பொழிலிற் றங்கி விறலியரது பாடலைக்கேட்டு புறத்து வினையின்மை யின் விநோதத்திலே நீடி உறைதலாலே, அவ்வாறு நீ நீடியதறியாது நின்னை உணரா தோர் அண்ணல் மெல்லியன் போன்மென உள்ளுவர்களோ? நீதான் அரவோடொக்கும் நின் பகைவரைக் கடுக அழிக்க வேண்டு நிலைமையில் அரவினைக் கடுக அழிக்கும் உரு மேற்றினை ஒப்பை; நினைச்சேர்ப்ப நின்ப டையாளரும் அஃதுடை வலத்தராயிருப் பர்; அவ்வாறு நீ மாறுபாட்டுடன் பொருத ழிக்கும் வழி நின்முடிக் கண்ணி இரத்தம் பட்டு நிறம் பெயர்தலால் பருந்து உறுத ற்கு ஆராய, கூற்றம் வலை விரித்தாற் போலக் களத்தில் எதிர்த்த மாற்றார் படையை யெல்லாம் ஒன்றாகக் கொல்லக் கருதி நோக்கினை நோக்கையுடையை; ஆகவே நீ செருவகத்துக் கடியை எனும் பொருள மைந்தது.

வடுவை மாய்க்கும் நுண்மணல் எனற் பாலதை வடுவடு நுண் மணல் எனக் கூறிய சிறப்பால் இது வடுவடுநுண்ணயிர் எனும் பெயர் பெற்றது. இதனால் அவன் றன் வினோதத்து மென்மையும் செருவ கத்துக் கடுமையும் கூறப்பட்டது.

## இரண்டாஞ் செய்யுள்

நின்னை இரப்போர்க்குக் கவிதலல்லது இரப்பதற்கு மலர்பறியாது. இனி நீ துணங்கைக்குத் தலைக்கை தந்து ஆரவை யாடு மகளிரொடு வருதலுக்குக் கோபித் தவளாகிய நின் மனைவி நினக்கு எறிய ஓங்கிய சிறு செங்கு வளையானது நீ ஈயென் றிழிந்தோன் கூற்றால் இரப்பவும் நினக்கு ஈந்து போகாது நின் இரப்பிற்குப் பொருளாய் நீ எமக்கு யார் என்று பெயர் வோள் கையதாயிருந்தது; அதை அவள் பாலின்றும் பறித்துக் கொள்ள மாட்டாத வனாகிய நீ வேந்தர்களெயிலை பறித்துக் கோடற்கு எவ்வாறு வல்லையாயினாய்; நின் கண்ணி வாழ்க, எனும் பொருளமைந்தது.

தான் அவளை எறிதற்கு ஓங்கிய சிறிய செங்குவளை யென்ற சிறுமையால் அவன் மென்மை கூறிய சிறப்பான் இதற்கு சிறு செங்குவளை என்று பெயராயிற்று. இத னால் அவன் வன்னன்மையொடும்,வென்றி யொடும் சேர்த்து அவன்றன் காம வின்பச் சிறப்புக்கூறப்பட்டது.

## மூன்றாஞ் செய்யுள்

நீ வேண்டி புலத்திறுத்து அவர் திறை கொடுப்ப அருள் செய்து பின்னின் மூதூர்க் குச் செல்குவையாயின், அரசனே! உனை யினும் பிறிதாறு செல். செல்லாயாயின் புதவிற்கதவு மெய்காணின் ஆங்கு நின்க ளிறு தாங்கலாக. எனும் பொரு ளமைந்தது.

கோள்வல் முதலைய என்ற அடைச் சிறப்பாலிஃது 'குண்டு கண்ணழி' எனும் பெயர் பெற்றது. இதனால் அடைந்தவர்க்கு அருளலொடு சேர்த்து அவன்றன் வென் றிச் சிறப்புக் கூறப்பட்டது.

## நாலாஞ் செய்யுள்

இறைகிழவோய்: நின்னை வள்ளிய னென்று காண்பேன் வந்தேன். யான் உள்ளியதனை முடிப்பாயாக. நின் கண்ணி வாழ்க. விறலியர் நின்மறம்பாட இரவலர் வறுமை தீர நன்கலங்களை வரையாது நல் கும் வண்மையையுடையை ஆகையால் என் போன்ற இரவலர் வறுமை தீர்த்தற்கு உயர் நிலை உலகத்துச் செல்லாது இவ்விருநில மருங்கில் நெடுங்காலம் வாழ்வாயாக. எனும் பொருளமைந்தது.

காலாட்படை முதலியவற்றைத் தகுதி யற்றன என்றெண்ணி யானைப்படை கண் டால் நில்லாது எதிர்க்கும் தானை என்ற சிறப்பால் இது 'நில்லாத்தானை' எனும் பெயர் பெற்றது. இதனால் அவன் கொடைச் சிறப்பும் தன்குறையுங் கூறி வாழ்த்தப்பட்டது.

## ஐந்தாஞ் செய்யுள்

ஆன்றோன் கணவ, சான்றோர் புரவல், நின்னயந்து வந்தேன், பொருந. மழவர் மெய்ம்மறை, கோவே நின்னாள் வெண் மழை போலச் செல்க. எனும் பொரு ளமைந்தது.

நன்கல வெறுக்கை துஞ்சுமென்ற சிறப்பானே இதற்கு துஞ்சும்பந்தர் எனும் பெயருண்டாயிற்று. இதனால் அவன் உலகு புரத்தலும் தன் குறையும் கூறி வாழ்த்திய வாறாயிற்று.

(தொடரும்)

"வித்தகம்"
வருட சந்தா விவரம்
முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0
வித்தக நிலயம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant K.Nagarattinam.